பத்திரிகைச் செய்தி

POCSO வழக்குகளில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஆதரவளிக்க ஆதரவு நபர்களுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012 (POCSO Act), POCSO Rules, 2020 மற்றும் தமிழ்நாடு அரசின் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, அரசாணை (நிலை) எண்.23, நாள் 12.08.2026 ஆகியவற்றின் அடிப்படையில், பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளின் போது தேவையான ஆதரவு மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குவதற்காக "ஆதரவு நபர்கள் (Support Persons)" தேர்வு செய்யப்பட உள்ளனர்.

ஆதரவு நபர் குழந்தையின் சிறந்த நலன், பாதுகாப்பு மற்றும் உரிமைகளை கருத்தில் கொண்டு, காவல்துறை, CWC, DCPU, மருத்துவமனை மற்றும் நீதிமன்றம் உள்ளிட்ட தொடர்புடைய அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். மேலும், குழந்தைக்கு தேவையான மருத்துவம், உளவியல் ஆதரவு, கல்வி மற்றும் மறுவாழ்வு சேவைகளைப் பெற உதவுவதுடன், வழக்கின் முன்னேற்றம் குறித்து குழந்தை மற்றும் குடும்பத்தினருக்கு தேவையான தகவல்களை வழங்கி, குழந்தையின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

குழந்தைகள் நலன், சுகாதாரம் அல்லது கல்வி தொடர்பான துறைகளில், குறிப்பாக சமூகப்பணி, சமூகவியல், சட்டம், உளவியல், குழந்தை வளர்ச்சி அல்லது குழந்தைகள் நலனுடன் தொடர்புடைய பிற பொருத்தமான துறைகளில் முதுகலைப் பட்டம் பெற்ற எந்தவொரு நபரும் விண்ணப்பிக்கலாம். மேலும், குழந்தைகள் கல்வி, வளர்ச்சி, சுகாதாரம் அல்லது பாதுகாப்பு தொடர்பான பணிகளில் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் அனுபவம் பெற்ற பட்டதாரிகளும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். ஆதரவு நபராக நியமிக்கப்படுவதற்கான குறைந்தபட்ச வயது 25 ஆண்டுகள்ஆகும்.

ஆதரவு நபரின் பணிக்காலம் 3 ஆண்டுகள் ஆகும். தகுதியான ஆதரவு நபர்களுக்கு, அவர்களுக்கு வழக்குகள் ஒதுக்கப்பட்டு, அவ்வழக்குகளில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்காக மட்டுமே, ஒரு வழக்கிற்கு ரூ.10,000/– வரை மதிப்பூதியம் (பயணச் செலவு உட்பட) வழங்கப்படும். வழக்குகள் ஒதுக்கப்படாத காலத்திற்கு எவ்வித மதிப்பூதியமும் வழங்கப்படாது.

தகுதியும் ஆர்வமும் உள்ள தனிநபர்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பான பணிகளில் ஈடுபடும் தகுதியான அமைப்புகள், ஆதரவு நபர் (Support Person) பணிக்கான விண்ணப்பப் படிவத்தை www.kanniyakumari.tn.nic.in–ல் பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் உரிய ஆவணங்களை இணைத்து 25.11.2026 –க்குள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு 3–வது தளம், இணைப்பு கட்டிடம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகர்கோவில் –629001 என்ற முகவரியில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்கலாம்.

FORMAT
District Child Protection Unit,
Kanniyakumari District,
Department of Children Welfare and Special Services

Application form for the Post of _____

1	**Name of the Applicant * (IN CAPITAL LETTERS)**		Recent Pass-port size photograph of the applicant to be affixed
2	**Name of the Father / Spouse***		
3	**Date of Birth ***		
4	**Gender**		
5	**Age ***		
6	**Marital Status**		
7	**Address for Communication * (IN CAPITAL LETTERS)**		
8	**Phone/Mobile Number***		
9	**E-mail ID***		
10	**Educational Qualification (Enclose the copy of supporting documents)***		
11	**Additional Qualification (if any)**		
12	**Details of Working Experience (Enclose the copy of the relevant experience certificates)***		

S. No	**Name of the organization.**	**Designation**	**Years of experience**		
			From (Date)	**To (Date)**	**No. of years & months**
				Total	

**Mandatory*
Note: Incomplete application and application without relevant supporting documents will be summarily rejected without any prior information.

I_____ hereby declare that the particulars furnished by me in this application form are true to the best of my knowledge and belief. In case any information is found to be incorrect, my candidature shall liable to be rejected.

Signature of the Applicant